**M.C.O.P. No.48/2025**

**Deposition of P.W.1**

**Dated : 19.06.2025**

**Name : திருமதி. சகாய செல்வராணி**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த விபத்து சம்பந்தமாக புகார் அளித்தது நான்தான். அதில் உண்மையான சங்கதிகளை குறிப்பிட்டு மனு அளித்தேன். அந்த புகாரின் அடிப்படையில் இறந்த என்னுடைய கணவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். விபத்து நடந்த சாலை ஆசாரிபள்ளத்திலிருந்து பாம்பன்விளையை நோக்கி செல்லும் சாலை என்றால், சரிதான். தென்வடல் சாலை என்றால், சரிதான். ஆசாரிபள்ளம் காவல்நிலையத்திலிருந்து விபத்து நடந்த இடம் சுமார் 50 முதல் 100 அடிக்குள் இருக்கும். விபத்து இடத்தை சுற்றி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். சம்பவ சமயத்தில் என்னுடைய கணவருக்கு ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டது என்றால், சரிதான். விபத்தின்போது அவர் ெஹல்மட் அணிந்திருந்தார். புகாரில் கொத்தனார் வேலை செய்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மறுநாள் காலை 11.00 மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால், அன்றே புகார் அளித்தேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. ெஹல்மட் அணிந்திருந்தால் இறந்த நபருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால், சரியல்ல. ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்கள் யார் எனக்கு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் ததேதியுதாஸ் என்பவர் எனது கணவருக்கு உறவினரா என்றால், இல்லை. எனது கணவரின் அப்பா பெயர் தேவசகாயம் என்றால், சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் அப்பா பெயரும் தேவசகாயம் என்றால், தெரியாது. 1ம் எதிர்மனுதாரர்தான்

ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்களை எனக்கு கொடுத்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை. அதனால்தான் 1ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக இருந்துகொண்டு நானும், 1ம் எதிர்மனுதாரரும் கூட்டு சேர்ந்து வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் காப்பீடு ம.சா.ஆ.6 ல் 500 ரூபாய் பிரிமியம் தொகை செலுத்தியதன் அடிப்படையில் அந்த தொகையை நான் வாங்கினேனா என்றால், இல்லை. எனது கணவரின் தாயார் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். விபத்து நடந்த சாலையின் தார் பகுதி எவ்வளவு அகலம் என்றால், தெரியாது. இருபுறங்களிலும் மண்பகுதி உள்ளது என்றால், சரிதான். ம.சா.ஆ.16 ஆவணத்தின் நகல்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். விபத்து நடந்த அன்று மதியம் 1.09 மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால், சரிதான். ம.சா.ஆ.24 விபத்து பதிவேடு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். ம.சா.ஆ.24 விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனத்திலிருந்து விழுந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ம.சா.ஆ.24 விபத்து பதிவேட்டில் என் கணவர் சுவாசத்தில் மது அருந்திய வாடை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. பிரபு என்பவர் எனது சித்தப்பா மகன் ஆவார். பிரபு என்பவர்தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளார் என்றால், தெரியாது. ஆவணங்களுக்கு எதிராக உண்மைக்கு புறம்பாக தெரிந்தே பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ம.சா.ஆ.22 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் வாகனத்தின் முன்புற பகுதி சேதம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் ம.சா.ஆ.23 ஆட்டோ வாகன ஆய்வறிக்கையில் எந்த சேதமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இருசக்கர வாகனம் மற்றும்

ஆட்டோ வாகனம் என்னுடைய வழக்கின்படி ஒரே திசையில் அல்லது எதிர் திசையில் வந்ததா என்றால், ஒரே திசையில் வந்தது. அவ்வாறு ஒரே திசையில் வந்தால் இருசக்கர வாகனத்தின் பின்புறத்திலும் ஆட்டோ வாகனத்தின் முன்புறத்திலும் சேதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால், தெரியாது. இருசக்கர வாகனத்தின் சைடுபுறத்தில் சேதம் ஏற்பட்டிருந்தது. ம.சா.ஆ.19 ல் ஆட்டோ TN 75 D 5832 இந்த வழக்கில் போக்குவரத்து போலிசாரால் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 12.05.1974 என் கணவரின் பிறந்த தேதி ஆகும். 40,000 ரூபாய் வருமானம் வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். கொத்தனாராக இருப்பதால் நாள் ஒன்றுக்கு 1500 ரூபாய் சம்பளம் வாங்குவார். வழக்கிற்காக 1500 ரூபாய் என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள ரூபாய் 90 லட்சம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் கோரியுள்ள வட்டி விகிதமும் மிகையாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. நான் மற்றும் 1ம் எதிர்மனுதாரர், போக்குவரத்து காவல்துறையினர் இணைந்து 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்டஈடு பெறவேண்டும் என்று பொய்யான ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால், சரியல்ல. இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனம்தான் தனிநபர் காப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால், சரியல்ல. உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.